15.07.2025

O.S.No. 46/2024

PW1–ஆறுமுகப்பாண்டி – த/பெ. பிச்சுமணி நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.07.2025

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> ( பிரதிவாதி தரப்பில்)

29. எனது தாத்தா தாவா சொத்தை 1948ம் ஆண்டு கிரையம் வாங்கியபின்பு அவரது ஒரே வாரிசான எனது தந்தைக்கு, எனது தாத்தாவின் இறப்பிற்கு பின்பு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். அதைபோல் எனது தந்தையின் இறப்பிற்குபின்பு வாரிசுப்படி எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான்.

30. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் வழக்கு சொத்திற்கான புகைப்படங்கள் என்று சொன்னால் இது இல்லை. (சாட்சி முதலில் புகைப்படத்தை பார்த்துவிட்டு, பின்பு சரியாக இல்லை என்று சொன்னார்)

31. வா.சா.ஆ.2 பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை உடன்படிக்கை ஏற்பட்டது என குறிப்பிடப்பட்டு, மேற்படி ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை, நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு காரணம் அந்த ஆவணத்தில் தாவா சொத்து இல்லை என்பதால் தான் என்றால் சரியல்ல.

32. கடந்த 10.01.2023ம் தேதி நான் எங்கிருந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

33. இந்த வழக்கின் 2ம் பிரதிவாதியை நான் பார்த்துள்ளேனா என்றால் பிரச்சனைக்கு பின்பு தான் பார்த்துள்ளேன்.

34. நான் பிராது 4ம் பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் உண்மை என்று சொன்னால் சரிதான்.

35. நான் பிராதில் கூறியுள்ளவாறு கள்ள ஆவணங்களை தாக்கல் செய்யாததாலும், அதை ரத்து செய்ய வேண்டி இந்த வழக்கில் பரிகாரம் கோராததாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

36. இந்த வழக்கு சம்பந்தமாக பிரதிவாதியின் முனனோர்கள் ஏற்படுத்திய ஆவணங்கள் அனைத்தும் என் கைவசம் இருந்தும், எனக்கு பாதகமாக வந்துவிடும் என்ற காரணத்தினால் அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல.

37. மேலும் அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் அதில் உள்ளவர்கள் அவசியதரப்பினர்கள் என்று இந்நீதிமன்றத்திற்கு தெரியவரும், அது என் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

38. தாவா சொத்தை எனது தாத்தா 1948 ம் கிரையம் வாங்கியபின்பு அதே சொத்தை பிரிவின்றி மற்றொரு பாகத்தை எனது தாத்தாவின் தம்பியான அண்ணாமலை நாடார் 1956 ல் கிரையம் வாங்கினார்.

39. எனது பிராதில் மரியம் பொன்னம்மாள், அண்ணாமலைநாடார் மற்றும் கருவேல் நாடார் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் யாருக்கு எவ்வளவு பாகம் பிரிக்கப்பட்டது என்று பிராதில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன். நான் எனது பிராதிலோ, எனது முதல்விசாரணை உறுதிக்கூற்றிலோ யாருக்கு எந்த பாகம், எந்த அளவில் ஒதுக்கப்பட்டது என்று கூறவில்லை என்பதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

40. பிரதிவாதிகள் தங்களது எதிரிடை கோரிக்கையில் 1948 ம் ஆண்டு முதலே வருவாய் ஆவணம் மற்றும் பதிவு ஆவணம் அனைத்தையும் சமர்ப்பித்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது அனைத்தும் தவறான ஆவணங்கள்.

41. வா.சா.ஆ.2 ஆவணமான எனக்கும், எனது சகோதரருக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள வழக்கு சொத்திற்கும், அதில் குறிப்பிட்டுள்ள எல்கைமாலுக்கும், ஸ்தலத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

42. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் பக்கம் எண்.6 ல் அதில் தெற்குபக்க எல்லையாக குத்தாலிங்கநாடார் பெயர் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் ஸ்தலத்தில் குத்தாலிங்க நாடாருக்கு எவ்வித சொத்து கிடையாது, மேலும் பிராது வழக்கு சொத்திற்கு தென்பக்கம் 2ம் பிரதிவாதிக்கு பொன்னுச்சாமி கிரையம் கொடுத்து, 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

43. தாவா சொத்திற்கு கீழ்புறம் எனக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து உள்ளது. மேற்படி பூர்வீக சொத்தில் வா.சா.ஆ.2 ல் சொத்து எண்.3 ல் 63 செண்ட் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். அந்த சொத்தை நான், பால்பாண்டி என்பவருக்கு விற்றுவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பால்பாண்டி பட்டாவும் வாங்கிவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

44. தாவாசொத்திற்கு கீழ்புறமுள்ள சொத்து எனக்கு சட்டப்படியான உரிமையும், அனுபவமும் இருந்ததால்தான் என்னால் கிரையம் கொடுக்க முடிந்தது. சட்டப்படியான சொத்து என்பதால்தான் என் பெயரில் பட்டாவும் இருந்தது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு எந்தவித அனுபவமும், உரிமையும் இல்லாத காரணத்தினால் தான் பட்டா எனது பெயரில் இல்லை என்றால் சரியல்ல. பட்டா என் தாத்தாவின் பெயரில் இருக்கிறது.

45. எனது பிராதில் குறிப்பிட்டுள்ள கள்ள ஆவணங்கள் மற்றும் மோசடி பட்டா குறித்து நான் மாவட்ட பதிவாளரிடமோ, வட்டாட்சியரிடமோ புகார் அளித்தேனா என்றால் இல்லை.

46. சரியான உரிமை மூலம் இல்லாத காரணத்தினால் மேற்படி நபர்களிடம் மனுவோ, நடவடிக்கையோ எடுக்கவில்லை. மேலும் காவல்துறையிடம், பொய்யான சங்கதிகளை வைத்து பணம் பறிக்கலாம் என்ற நோக்கக்தோடு 1ம் பிரதிவாதி மீது புகார் அளிக்கப்பட்டது என்றால் புகார் அளித்தேன். ஆனால் பொய்யான சங்கதிகள் இல்லை. காவல்நிலையத்தில் நீதிமன்றம் மூலம் தீர்த்துக்கொள்ளுங்கள் என அறிவுறுத்தப்பட்டது.

47. நான் 2ம் பிரதிவாதியை இந்நாள்வரை பார்த்ததுமில்லை, வழக்குசொத்து சம்பந்தமாக பேசியதுமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தபோது 2ம் பிரதிவாதி வந்தார். 2ம் பிரதிவாதி பூர்வீகம் சென்னை என்றால் எனக்கு தெரியாது.

48. 1945ம் ஆண்டுக்கு முன்பே பிரதிவாதிகளிடம் ஆவணங்களும், அனுபவமும் இந்நாள்வரை இருந்துவருவதால் பிரதிவாதிகள் கோரியுள்ள எதிரிடை கோரிக்கை அனுமதிக்கப்பட்டு, எனது வழக்கு போதுமான ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

49. நான் வழக்குசொத்தை அனுபவம் செய்தது கிடையாது என்பதால் தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு திசையில் 2ம் பிரதிவாதியை எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. தாவா சொத்து மானாவரி சொத்து என்பதால் நான் அவ்வப்போது தான் சென்று பார்ப்பேன்.

50. வழக்கு சொத்தும், அதன் மேற்கு, வடக்கு மறறும் தெற்கு திசையில் உள்ள தனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வேலி அமைத்து, ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் செய்துவருகிறார் என்று சொன்னால் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில்தான் விவசாயம் செய்துவருகிறார்.தாவா சொத்தில் கிடையாது.

51. நான் வழக்கு சொத்தில் எனது அனுபவத்தை நிரூபிக்க நீதிமன்ற ஆணையரை நியமித்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் அனுபவம் இல்லாத காரணத்தினால்தான் எனக்கு சட்டப்படியான அனுபவ உரிமையான பட்டா எனது பெயரில் பட்டா கிடையாது என்றும் மற்றும் நீதிமன்ற ஆணையர் மூலம் ஸ்தல பார்வையிட மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

52. எனது அனுபவம் மற்றும் உரிமை மூலத்தை சந்தேகத்துக்கு இடமின்றி நான் நிரூபிக்க தவறிவிட்டதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

53. எனது தாத்தாவின் கிரைய ஆவணமான 1948 ம் ஆண்டுமுதல் வழக்கு தாக்கல் செய்யும் காலமான வில்லங்க சான்றிதழை நான் வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

54. பிரதிவாதிகள் தற்போது தங்களின் உரிமை தொடங்கிய காலம் முதல் இந்நாள்வரை தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்து, உரிமை மூலத்தை நிரூபித்துள்ளதால் அவர்கள் கோரிய எதிரிடை கோரிக்கை மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

55. சரியான அனுபவ ஆவணம் மற்றும் பிரதிவாதியின் ஆவணங்களை ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்காத தோஷத்தால் நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

56. நான் பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற தீயநோக்கத்தாடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.